நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 14 ஹிஜ்ரி 1432 ரபியுல் அவ்வல் பிப்ரவரி 2011

இலவசம்

# நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம்



# ஹிஜ்ரி 1432 புத்தாண்டில் சமூக நற்பணிகளைத் தொடர முயிஸ் உறுதி

ஹிஜ்ரி புத்தாண்டின் தொடக்கம் நமது கடந்தகாலச் சாதனைகளைப் பிரதிபலிக்கும் மிகப் பொருத்தமான தருணம் ஆகும். அதன் மூலம் வரும் ஆண்டுகளில் நாம் சிறந்த வாழ்க்கைக்கான புதிய தீர்மானத்தையும் மற்றும் திறனையும் உருவாக்கும் உறுதியைப் பெறுகிறோம்.

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் ஹிஜ்ரி 1431 ஆண்டு முழுவதிலும் எதிர்நோக்கிய சவால்களை மேலும் சமாளிப்பதற்குரிய ஆற்றலை அருளும் வல்ல இறைவன் அல்லாஹ்வுக்கு நமது ஆழ்ந்த நன்றி. அவனுடைய நல்லாசியைக் கொண்டு நாம் நமது சமயக் கட்டுப்பாடுகளை எந்நேரத்திலும் கடைப்பிடித்து, நமது நாட்டுச் சூழலுக்கும் மாறிவரும் உலகப்போக்குகளுக்கும் ஈடுகொடுப்பதற்கான உறுதியைப் பெற்றுள்ளோம். இந்த முயற்சிகளை இஸ்லாமிய உணர்வு மற்றும் கொள்கைகள், திருக்குர்ஆன் மற்றும் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் சுன்னத் போதனைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கவனத்துடன் செயல்படுத்த வேண்டும்.

## அந்த முயற்சிகள் வருமாறு

- ஹஜ் யாத்திரை மேற்கொண்ட 2,180 சிங்கப்பூரர்கள், பயணத்தின் தொடக்கம் முதல், புனித மக்கா, மதீனா நகரப் பயணங்கள் உள்ளிட்ட ஹஜ் கடமைகளைப் பாதுகாப்பாக நிறைவேற்றிவிட்டு நலமாக நாடு திரும்ப வேண்டும்.
- இஸ்லாம் எடுத்துரைக்கும் முறையில் நமது பள்ளிவாசல்களில் 'குர்பான் சடங்கு'களை நிறைவேற்ற வேண்டும்.
- ஜகாத் தொகை வசூலிப்பை அதிகப்படுத்தி 4,177 ஏழைகள் மற்றும் உதவிதேவைப்படும் தனிநபர்களுக்கு உதவுவதன் மூலம் சுயநிதிச் சார்புடையவர்களாக அவர்களை ஊக்குவிக்கலாம். 2008ல் முன்னேற்றப் பங்காளித்துவத் திட்டத்தில் பங்கேற்ற 210 மொத்த குடும்பங்களில், 172 குடும்பங்கள் (80%) போதிய நிதிவசதியுடன் இருப்பதால் ஹிஜ்ரி 1431 ஆண்டில் அவர்களுக்கு உதவி எதுவும் தேவைப்படவில்லை.
- பல கலாசார சமூகங்களைக் கொண்ட முஸ்லிம்களின் அனைத்துலக மாநாட்டை முதல் முறையாக ஏற்று வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் உலக வரைபடத்தில் இடம்பெற்றுள்ளது. அனைத்துலக முஸ்லிம் சமயத் தலைவர்களையும், அறிஞர்களையும் சிங்கப்பூர் ஒருங்கிணைத்து வாழ்க்கைக்கும் பல கலாசாரங்களைக் கொண்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் தேவையான அம்சங்களை எடுத்துரைக்கச் செய்தது.
- சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்துக்கு புதிய பத்வா அடிப்படையிலான மத்திய சேமநிதி நியமன வழிகாட்டி முறை தெரிவிக்கப்பட்டது. ஷரியா சட்டமுறைக்கும், தற்போதைய நடைமுறைக்கும் ஏற்றதாக அந்த நியமனம் இருக்க வேண்டும் என்பதே காரணம்.

இந்தச் சாதனைகள் அனைத்தும் நிலைநாட்டப்படவேண்டும். வரும் ஆண்டுகளிலும் மேம்படவேண்டும். புதிய ஹிஜ்ரி ஆண்டின் வருகையை முன்னிட்டு, இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி நமது புதிய முயற்சிகளுக்கும் திட்டங்களுக்கும் மகத்தான ஆதரவு வழங்கிய முஸ்லிம் சமூகத்துக்கு நமது மனப்பூர்வமான நன்றிகளையும், நல்லுணர்வையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஹிஜ்ரி 1432 ஆண்டை வரவேற்கும் நாம், இஸ்லாமிய நெறிமுறைப்படி தொடர்ந்து வாழ்ந்து, நமது சமய நம்பிக்கையை வலுப்படுத்தி, நற்செயல்களைப் பரப்புவோம். அதன்மூலம் நமது சமூகம் தொடர்ந்து மிகுந்த ஆதரவையும் நல்லாசிகளையும் பெற்று, சவால்களைச் சமாளித்து அனைவர் நலனுக்கும் உரிய அதிக பயன்களைச் சாதிக்கும், இன்ஷா அல்லாஹ்.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்ற (முயிஸ்) தலைவர், மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் ஹிஜ்ரி 1432 ஆண்டு நல்வாழ்த்துகளை அனைவர்க்கும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# பதவி ஓய்வு பெற்ற தலைமை முஃப்திக்கு பாராட்டு விழா புதிய முஃப்தி பொறுப்பேற்றார்

தலைமை முஃப்தியாக கடந்த 38 ஆண்டுகளாகப் பணியாற்றிய சையது ஈஸா அல் சமைத் அவர்கள் (வயது 72) பதவி ஓய்வு பெற்றதை அடுத்து புதிய முஃப்தி பொறுப்பேற்றார்.

துணை முஃப்தியாக இருந்த முஹம்மது ஃபத்ரிஸ் பக்ரம் அவர்கள் (வயது 40) சிங்கப்பூர் தலைமை முஃப்தியாகப் பொறுப்பேற்றார். உஸ்தாத் ஃபத்ரிஸ் இப்பதவிக்கு ஏற்புடையவர், சையது ஈஸா அவர்களின் பங்களிப்பைத் தொடரக்கூடியவர் என்று முஸ்லிம் விவகாரங்களுக்கு பொறுப்புவகிக்கும் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

மலேசியாவின் அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம்பெற்ற அவர், 1997 முதல் 2003 வரை சிங்கப்பூர் மத்ரஸா அல்-இர்ஸ்யாத் முதல்வராக இருந்தார்.

சையது ஈஸா அவர்களின் 38 கால சமூக, மார்க்க நற்பணிகளையும், தலைமைத்துவப் பங்களிப்பையும் டாக்டர் யாக்கூப் வெகுவாகப் பாராட்டினார். அவர் முஃப்தி அலுவலக ஆலோசகராக இருந்து வருவார் என்று முயிஸ் தலைவர் அலமி மூஸா தெரிவித்தார்.

சையது ஈஸா ஆற்றிய அரும்பணிக்கு நன்றி பாராட்ட சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் கடமைப்பட்டிருக்கிறது. மார்க்க நெறிகள், கடமைகள், ஹிஜ்ரி புத்தாண்டு, பெருநாள் தொடர்பான அவருடைய

அறிக்கைகளை, அவர் முன்னின்று நடத்திய நிகழ்ச்சிகளை மறக்க முடியாது. பல நிகழ்ச்சிகளின்போது அவரைப் பின்பற்றித் தொழும் வாய்ப்பு பலருக்கும் கிடைத்தது.

## பிரதமர் பாராட்டு

"சையது ஈஸா சிங்கப்பூருக்குச் சிறப்பு சேர்த்த பெருமைக்குரிய முஸ்லிம் தலைவர். தெளிவான சிந்தனையும், அறிவாற்றலும், தலைமைத்துவப் பண்பும் மிக்க சாதனையாளர்" - பிரதமர் லீ சியென் லூங் வழங்கிய பாராட்டு இது.

குடியரசின் முஃப்தியாக 38 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அயராது சமூகத்திற்குக் கடமையாற்றி, அண்மையில் ஓய்வு பெற்ற அவருக்கு நன்றி பாராட்டும் விருந்து 21.1.2011 அன்று நடைபெற்றது. முயிஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற அந்த விருந்தில் பிரதமர் உரையாற்றினார்.

"சிங்கப்பூர் முஸ்லிம்கள் இக்கட்டான பல சூழ்நிலையைச் சந்திக்க நேர்ந்தபோது அவற்றைச் சமாளிக்க உதவிய மகத்தான சமயத் தலைவர் சையது ஈஸா சமைத். மனித உறுப்பு மாற்று சட்டத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் உறுப்புதானம் செய்வதற்கு அவர் வழிவகுத்தார். செப்டம்பர் 11 தீவிரவாதத் தாக்குதல், ஜமா இஸ்லாமியா தீவிரவாதக் குழுவினரின் கைது ஆகிய நிகழ்வுகளின் போது தெளிவான, வலுவான சிந்தனையுடன் சிங்கப்பூர் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தினார். சிறந்த அணுகுமுறை மூலம் சமயப் புரிந்துணர்வை சிங்கப்பூரர்களிடையே வலுப்படுத்தினார். நாட்டின் தூணாக விளங்கும் ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை நமது மக்களிடையே கட்டிக் காக்க உதவினார்.

அவருடைய நற்பணிகளைப் பட்டியலிட்டு நன்றி பாராட்டினார் பிரதமர். இன ஒற்றுமைக்கான அதிபர் மன்றம், இன, சமய ஐக்கியத்திற்கான தேசிய பணிக்குழு, குடியரசின் அனைத்து சமய மன்றம் ஆகிய முக்கிய அமைப்புகளில் சையது ஈஸா அவர்கள் இடம் பெற்று நற்சேவையாற்றினார். அதன் மூலம் உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் சிங்கப்பூரின் நற்பெயரை கட்டிக்காத்தார் என்று திரு.லீ சியென் லூங் சுட்டிக்காட்டி நன்றி பாராட்டினார்.

## ஷேக் பட்டம்

முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் சுற்றுப்புற நீர்வள அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் இந்நிகழ்ச்சியில் சையது ஈஸா அவர்களுக்கு ஷேக் சிறப்பு விருதைச் சூட்டினார். 1972 முதல் 2010 வரை நாட்டுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகளை அமைச்சர் வெகுவாகப் பாராட்டினார். அந்த நற்பணிகளின் நினைவாக அவர் பெயரில் தலைசிறந்த மாணவருக்குக் கல்விமான் விருது வழங்கும் திட்டத்தையும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் வெளியிட்டார். அதன்படி முயிஸின் இஸ்லாமிய முதுநிலைப் பட்டக் கல்வியின் தலைசிறந்த மாணவருக்கு நிதி உதவி வழங்கப்படும். அந்த மாணவர் பட்டக்கல்வி பயில்வதற்கு ஆண்டுக்கு $10,000 ஊக்கத் தொகையைப் பெறுவார்.

பட்டக் கல்விக்கான இந்த உதவி நிதிக்கு வாரிஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ், எஸ்.எம்.ஜலீல் அறநிறுவனம், முஹம்மது முஸ்தபா சம்சுதீன் நிறுவனம், டி.எம்.ஃபஸ்லி சுற்றுலா நிறுவனம், மல்லால் நமாஸி நிறுவனம் ஆகியவை ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

## இந்திய முஸ்லிம் பேரவை

இந்திய முஸ்லிம் பேரவையும் பென்கூலன் பள்ளிவாசலும் சையது ஈஸா அவர்களுக்கு பாராட்டு விழா நடத்தி சிறப்பித்தன. 23.1.2011 முற்பகலில் பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் தலைவர் ஹாஜி அலமி முசா, முயிஸ் நிர்வாகக் குழுவினர், ஹாஜி எஸ்.எம்.ஜலீல், 15 இந்திய முஸ்லிம் சங்கங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் டாக்டர் கே.எம்.தீன், செயலாளர் மு.அ.மசூது, கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் நசீர் கனி முதலானோர் தலைமை முஃப்தியாகப் பணியாற்றிய 38 ஆண்டுகளில் சையது ஈஸா அவர்கள் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூக அமைப்புகளுக்கு வழங்கிய ஆக்ககரமான ஆலோசனைகளையும், நல்லாதரவையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

இன, சமய, சமூக ஒற்றுமைக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கி வழிகாட்டியாகத் திகழ்ந்தவர், என்றென்றும் நம் அனைவரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர் சையது ஈஸா அவர்கள் என்று புகழாரம் சூட்டினார் கே.எம்.தீன். சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அமைப்புகள், வெளிநாட்டிலிருந்து ஆலிம்களையும், மார்க்க ஆசிரியர்களையும் சிங்கப்பூரில் பணியாற்ற அழைப்பதற்குரிய நடைமுறைகளையும், நமது சமயக் கோட்பாடுகளையும் எடுத்துரைத்து வழிநடத்திய தலைவர் அவர் என்று விளக்கிப் பேசினார் ஹாஜி மசூது. மலாய், ஆங்கில மொழி வாசகர்கள் மட்டுமே பயனடையக்கூடியதாக இருந்த முயிஸ் இதழ் தமிழ் மொழியிலும் வெளிவருவதற்கு அவர் வழிவகை செய்ததை சுட்டிக்காட்டி நன்றி பாராட்டினார் தமிழ் ஆசிரியருமான மசூது.

பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் செயலாளர் ஹாஜி ரபீக் நன்றியுரையாற்றினார். சையது ஈஸா அல் சமைத் அவர்கள் ஒட்டுமொத்த சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்துக்கும் ஒப்பிட முடியாத முன்னோடி. முஃப்தி பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் முஃப்தி அலுவலகத்தின் ஆலோசகராக அவர்கள் இருந்து வருவார்கள் என்ற செய்தி மகிழ்ச்சிக்குரியது. அவர்களின் மார்க்க, சமூக நற்பணி நமக்குத் தொடர்ந்து கிடைக்க எல்லா வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக என்று இறைஞ்சினார் அவர்.

புதிய முஃப்தியாகப் பொறுப்பேற்றுள்ள ஹாஜி ஃபத்ரிஸ் பக்ரம் அவர்களின் துஆ உரையைத் தொடர்ந்து மதிய விருந்தளிப்புடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# சமுதாய முன்னோடி அபுபக்கர் மைதீன்

*முன்னோர் வழியில் முன்னேறுவோம்!*

சிங்கப்பூர் வளர்ச்சிக்குப் பாடுபட்ட நமது முன்னோர், பெரியோர்களின் சாதனை முழக்கமாக, பதிவாக அமைந்த ஒரு செற்பொழிவை மறக்க முடியாது.

முன்னோடியாகத் திகழும் சிங்கப்பூர் ஜாமியா, மிஷனரி சங்கத்தின் முன்னைய தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன் ஆற்றிய உரை அது.

இந்திய முஸ்லிம் சமூகம் வர்த்தக, தொழில் திறனுக்கும், வலுவான குடும்பப் பிணைப்புக்கும் மிகச் சிறந்த முன்னுதாரணம். இந்தியாவிலிருந்து இங்கு வந்த நமது முன்னோர்கள் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பங்காற்றினர். அவர்கள் வர்த்தக, தொழில் துறைகளில் கடின உழைப்பாளிகளாகவும் வெற்றியாளர்களாகவும் விளங்கினர். அதே சமயம், நமது முன்னோர்கள் சமூக நலனிலும் எதிர்கால முன்னேற்றத்திலும் அக்கறையும் கவனமும் செலுத்தினர். அதனால் சொத்துகளையும் உடைமைகளையும் அவர்கள் மானியமாக வழங்கினர். பல வக்ஃப் அறக்கட்டளைகளை உருவாக்கினார்கள். எதிர்கால நலனுக்காக தொலை நோக்குடன் பள்ளிவாசல்களையும் மத்ரஸாக்களையும் கட்டினார்கள். நம் முன்னோர்கள் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பு உணர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர்களிடமிருந்து இன்றைய தலைமுறையினர் படிப்பினைகளைப் பெற வேண்டும் .

ஹாஜி அபுபக்கர் மைதீன் 2004 டிசம்பர் மாதம் நடைபெற்ற பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது. முன்னோர் வழியில் நாம் முன்னேற வேண்டும் என்பதே அதன் சாரம். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் அன்றைய ஆலோசகர் ஹாஜி எம்.கே.ஏ.ஜப்பார் தலைமையில் பென்கூலன் பள்ளிவாசல் அரங்கில் இடம் பெற்ற நிகழ்ச்சி அனைவர் நினைவிலும் பதிவான ஒன்று.

முன்னோர் காட்டிய வழியில் நமது சமூக, சமய, நாட்டு நலனுக்கும் அரை நூற்றாண்டுக்கு மேல் அரும்பணியாற்றிய ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்கள் இன்றைய இளைய தலைமுறைனருக்கு எடுத்துக்காட்டான முன்னோடி.

அபுபக்கர் மைதீன் அவர்கள் ஜாமியா தலைவராகப் பொறுப்பேற்றதும் அரிய பல மாற்றங்களைச் செய்து முன்னுதாரணமான அமைப்பாக நிலைபெறச் செய்தார். அதே தருணத்தில் சிங்கப்பூரின் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூக சங்கங்கள், அமைப்புகளின் மேம்பாட்டுக்கும் அவர் பங்காற்றினார்.

ஜாமியாவின் கல்விச் சேவை விரிவாக்கத்திற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளும், செயல்படுத்திய திட்டங்களும் விரல்விட்டு எண்ண முடியாதவை. ஜாமியா கல்விப் பிரிவின் பணிகள் மிக விரிவாக ஆராயத் தக்கவை. ஜாமியாவின் அதிகாரிகளும் ஊழியர்களும் கல்வித் திறனை மென்மேலும் உயர்த்திக் கொள்வதற்குக் களம் அமைத்தவர் அவர்.



முதியோர் பராமரிப்புச் சேவைகள், பிற சமய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்ட நற்பணிகள், சமூகத் தலைவர்கள், அமைப்பினருடன் சேர்ந்து ஆற்றிய பங்கும் விரிவானவை.

அறிவாற்றலும் நிபுணத்துவத் திறனும் மனிதகுல மேம்பாட்டுக்கும் நலனுக்கும் பயன்பட வேண்டும் என்பதே அவருடைய இலக்காக, குறிக்கோளாக இருந்தது.

சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் நலனும் பயனும் நல்கக்கூடிய, கடமை கடப்பாடு மிக்கதாக மக்களின் கொள்கையும் கோட்பாடும் அமைய வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தார். ஜாமியாவை நிறுவிய அப்துல் அலீம் சித்தீக்கி அவர்களைப் போன்றே ஹாஜி அபுபக்கர் மைதீனும் முன்னோடி உணர்வுடன் கடமையாற்றி வந்தார். - ஜாமியாவின் துணைத் தலைவர் முகம்மது சலீம் அவர்களின் கண்ணோட்ட வரிகள் இவை.

ஜாமியா சிங்கப்பூரின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய அவர், வயது காரணமாக, அந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்றிருக்கிறார். அதை முன்னிட்டு சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் கடந்த 31.10.2010 அன்று அபுபக்கர் மைதீன் அவர்களுக்கு பிரியாவிடை விருந்துபரிப்பு நடத்தியது.

கம்போங் கிளாம் மலாய் மரபுடைமை நிலையத்தில நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், நாடாளுமன்ற நாயகர் அப்துல்லா தார்மூஜி, அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நமது குடியரசின் அனைத்து முஸ்லிம் தலைவர்களுக்கும் ஹாஜி அபுபக்கர் மைதீன் ஒரு முன்னோடி என்று அமைச்சர் டாக்டர் இப்ராஹிம் தமது உரையில் குறிப்பிட்டார். கடந்த 40 ஆண்டுகளில் அவர் சாதித்தவற்றை விரிவாக எடுத்துரைத்தார். சமூக சேவை, சமய நற்பணிகள், தொழில் முனைப்புத் திறன், செயல் திட்டங்கள் முதலான பல துறைகளில் நமது சமூகத்திற்கும் நாட்டுக்கும் ஜாமியா தலைவர் சேவையாற்றி, வழிகாட்டிய பெருமகன். குறிப்பாக, சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் அரும்பங்காற்றியவர் அவர் எனப் புகழாரம் சூட்டினார் அமைச்சர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி, ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் ஃபரியுல்லாஹ் முதலானோர் ஹாஜி அபுபக்கர்



மைதீன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பித்தனர்.

ஜாமியா சிங்கப்பூர் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக கல்வி, சமூக வளர்ச்சி, சுகாதாரப் பராமரிப்பு முதலான நற்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் அல்ஹாஜ் அபுபக்கர் மைதீன் அவர்களின் நாற்பதாண்டு கால பங்கு பணிகளை நாடறியும். குடியரசிலுள்ள இந்திய முஸ்லிம் அமைப்புகள் ஜாமியா சிங்கப்பூருடன் அணுக்கமாக இணைந்து சமூக வளர்ச்சி மற்றும் இஸ்லாமிய நற்பணிகளைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்தில் 2009 ஜனவரியில் புரிந்துணர்வு-இணக்கக் குறிப்பு கையெழுத்திடப்பட்டது.

கடந்த காலத்தில் முன்னோடி முஸ்லிம் பெரியார்கள் பலர் சிங்கப்பூரில் ஆற்றிய அரும்பணி நம்மை வழிநடத்தக் கூடியது. அவர்கள் தன்னலம் கருதாமல் மேற்கொண்ட தியாகப் பணிகள் சமுதாயத்திற்கு நற்பலனை அளித்துள்ளன. அவர்கள் காட்டிய வழியில் நாமும் நமது சமுதாய மேம்பாட்டுக்காக ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று அப்போது அபக்கர் மைதீன் எடுத்துரைத்தார்.

அந்த நிகழ்சசியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களின் தொலைநோக்குடைய நீண்டகாலப் பணிகளைப் பட்டியலிட்டார். கல்வி அறக்கட்டளை நிதியத்தின் (ETF) முதல் தலைவராக விளங்கிய முன்னோடி அவர். ஜாமியாவின் வளங்களையும் நிபுணத்துவத் திறன்களையும் மற்ற சங்கங்கள், சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன் பகிர்ந்து கொள்ளும் அவருடைய திட்டம் தூர நோக்குடையது, ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பயன்தரக்கூடியது என்று அமைச்சர் குறிப்பிட்டார். சிங்கப்பூர் முஸ்லிம்களில் 17 விழுக்காட்டினர் இந்திய முஸ்லிம்கள் என்றாலும் அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிவரும் பங்கு பன்மடங்கு அதிகரித்துள்ளது என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

## விருதுகள்

ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்கள் பெற்ற சாதனை விருதுகள் ஒன்று இரண்டு அல்ல. ஜாமியா சிங்கப்பூரின் தலைவராகத் திகழ்ந்த அவருக்கு அனுகெரா ஜாஸா செமர்லாங் (ANUGERAH JASA CEMERLANG) உன்னத விருதை 23 ஆகஸ்ட் 2008ல் முயிஸ் அளித்தது. அதிபர் எஸ்.ஆர்.நாதன் அதை வழங்கினார்.

ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களின் தன்னலமற்ற, அர்ப்பணிப்பு மிக்க, நீண்டகால சமூக நலப் பணிகளையும், மனிதாபிமான நல்லிணக்கச் சேவைகளையும் அங்கீகரித்துப் போற்றும் வகையில் அந்த விருதை முயிஸ் வழங்கியது.

ஜாமியா தலைவர் 2004ல் அனுகெரா ஜாஹரி எனும் சாதனையாளர் விருதைப் பெற்றார். பெரித்தா ஹரியான் பத்திரிகையும் மெக்டொனல்டு நிறுவனமும் இணைந்து அந்த விருதை வழங்கிச் சிறப்பித்தன. அதனை முன்னிட்டு ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் ஆலோசகரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஹாஜி எம்.கே.ஏ.ஜப்பார் 14.6.2004 மாலை ஜாமியா இஸ்லாமிய நிலைய அரங்கில் பாராட்டு நிகழ்ச்சியை நடத்தினார்.

“அவர் மனிதருள் மாணிக்கம் என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். நற்பணிகளுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர். அவரைப் போல் இன்னொருவரைக் காண்பது அரிது” என்று வெளியுறவுத் துணை அமைச்சரும், வடகிழக்கு சமூக மேம்பாட்டு மன்ற மேயருமான ஜைனுல் ஆபிதீன் ரஷீத் அப்போது புகழாரம் சூட்டியதை மறக்க முடியுமா?

இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் புத்த சமயச் சங்கம் (Buddhist Lodge) ஜாமியாவின் கல்வி அறநிதிக்கு 50 ஆயிரம் வெள்ளியை வழங்கியது.

ஹாஜி அபுபக்கர் மைதீன்அவர்களின் நற்பணிகள் நாடறிந்தவை. நல்லிணக்கப் பயணத் திட்டம் (Touch of Harmony) அரிய முன்னுதாரணம். அவரும் மெக்சிகோ நாட்டின் தூதராக சிங்கப்பூரில் பணியாற்றிய ரமோஸ்-கோமெஸூம் 2004ல் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர். பல இன, சமய மக்களிடையே நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்கும் நோக்கில், உலகளாவிய இளைஞர் பரிமாற்றத்திற்கு வகைசெய்யும் திட்டமே அது. மாணவர்களும் இளைஞர்களும் உயர்கல்வி கற்கும் இத் திட்டதின் கீழ், நியூயார்க் பல்கலைக் கழக உயர்கல்விச் சேவைப் பிரிவுடன் ஜாமியா சிங்கப்பூர் தொடக்கமாக உடன்பாடு செய்து கொண்டது. நியூயார்க் மாணவர்களும் சிங்கப்பூர் மாணவர்களும் சேர்ந்து பல்கலைக் கழகக் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டது. இந்து, கிறிஸ்துவ, புத்த சமய அமைப்புகளும் இத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கின. ஜாமியா சிங்கப்பூர் 2008 ஜூலையில் 4 மாணவர்களையும் 2 பராமரிப்பாளர்களையும் நியூயார்க் நகருக்கு அனுப்பியது.



நல்லிணக்கப் பயணத் திட்டம் பல சமூக, சமய, கலாசாரப் புரிந்துணர்வுக்கான கல்விக் களமாகத் திகழ்வது குறித்து ஹாஜி அபுபக்கர் மைதீன் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தார். இத்திட்டத்தை மேலும் பிரிட்டன், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின் மற்றும் பல ஆசிய பசிபிக் நாடுகளுக்கு விரிவுபடுத்த ஜாமியா சிங்கப்பூர் விரும்புகிறது. அந்த நாடுகளும், சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் இத்திட்டம் குறித்து ஆலோசனை தெரிவிக்க வேண்டும் என அபுபக்கர் மைதீன் கேட்டுக் கொண்டார். லீ அறக்கட்டளை, நல்லிணக்க கல்விப் பயணத் திட்டத்திற்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கி வருகிறது.

இந்திய முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் சிங்கப்பூரின் 44வது தேசிய தின விழா 2.8.2009 அன்று கொண்டாடப்பட்டபோது ஜாமியா தலைவர் அபுபக்கர் மைதீன் அவர்களின் நற்பணியைப் பாராட்டி சிறப்பு விருது வழங்கப்பட்டது.

இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் ஆற்றிவரும் அரிய சேவைகளை மலபார் முஸ்லிம் சங்கத்தின் ஜனாப் நஸீம் தமது பாராட்டுரையில் விவரித்தார். மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் இந்திய முஸ்லிம் பேரவையின் விருதை ஜாமியா தலைவருக்கு வழங்கினார்.

நமது தேசிய தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்ச்சி சிறப்பு மிக்கது என ஜாமியா சிங்கப்பூரின் தலைவர் அபுபக்கர் மைதீன் தமது நன்றியுரையில் குறிப்பிட்டார். தமிழில் தேசிய தின வாழ்த்து கூறினார்.

நமது சமூகம் மற்றும் நாட்டின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் நாம் ஒருங்கிணைந்து சிந்தித்து செயல்படவேண்டிய கடப்பாட்டை உணர்த்தும் விழா இது என அவர் வருணித்தார். நமது முன்னோர்கள் வகஃபு சொத்து வடிவில் செல்வத்தைத் திரட்டி வைத்தனர், அவை சமுதாயத்திற்கு இன்று பலனளித்துக் கொண்டிருக்கின்றன. அது போன்ற சொத்துகளைப் பெருக்குவதில் நாமும் நமது பங்கையாற்ற வேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப நாம் முனைப்பான செயல்திறனுடன் சமூக, தேசிய முன்னேற்றத்திற்கு பங்காற்ற வேண்டும் என்று அவர் கூறினார். இந்திய முஸ்லிம் பேரவையின் நற்பணிகளுக்கு ஜாமியா ஒத்துழைப்பு நல்கும் என்று அவர் அப்போது உறுதி தெரிவித்தார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக், குவின்ஸ் டவுன் முஜாஹிதீன் பள்ளிவாசலில் முன்னர் நடத்திய மீலாத் விழாவின் போது அல்ஹாஜ் அபுபக்கர் மைதீன் அவர்களுக்கு சிறப்பு விருதும் நினைவுப் பரிசும் வழங்கியது.

சவுதி தூதரகம் சென்ற 20.12.2010 அன்று அவரது பணி ஓய்வை முன்னிட்டு பாராட்டு விருந்து நடத்தியது. அமைச்சர்களும் அரசதந்திரிகளும் சமூக, சமயத் தலைவர்களும் அதில் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் சமய நல்லிணக்கச் சங்கத்தின் (IRO) சார்பில் ஹாஜி அபுபக்கர் மைதீனின் பணிகளைச் சிறப்பிக்கும் விழா 22.12.2010 அன்று ராபிள்ஸ் டவுன் கிளப்பில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சங்கத்தின் தலைவர் லீ போக் குவான், பாலவி பள்ளிவாசல் இமாம் ஹபீப் ஹசன், கத்தோலிக்க தலைமைப் பேராயர் நிக்கோலாஸ் சியா, அருட் சகோதரி தெரேசா சியாவ், சீக்கிய சங்கத்தின் ஹர்பன் சிங், யூத சமயத்தின் ராபி மோர்டிசாய் அபர்கைல், புத்த சமயத்தின் செள கூன், அமீரலி அப்டியாலி போன்றவர்களும் பல்வேறு சமயத் தலைவர்களும் கலந்துகொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சான் சூ சென் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

சமுதாய முன்னோடி அல்ஹாஜ் அபுக்கர் மைதீன் அவர்களின் ஆலோசனையும் நற்பணியும் ஜாமியாவுக்கும் நமது சமூக அமைப்புகளுக்கும் தொடர்ந்து கிடைக்க இறைவனின் நல்லருளை வேண்டுவோம்.-**ஜே.எம்.எஸ்.**

# நாகூர் மரபுடைமை நிலையத் திறப்பு விழா அறிவிப்பு

நாகூர் தர்கா மரபுடைமை நிலையம் வரும் மே மாதம் திறக்கப்படும். தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் அமைந்துள்ள நமது சரித்திர, கலாசார தேசிய நினைவுச் சின்னமான நாகூர் தர்காவின் புதுப்பிப்புப் பணிகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து மரபுடைமை நிலையமாக அது இயங்கவிருக்கிறது.

முயிஸ் அலுவலகத்தில் கடந்த 16.12.2010 அன்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் திறப்பு விழா குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

நாகூர் தர்கா மறுசீரமைப்புக் குழுவின் தலைவர் ஹாஜி முஹம்மது அப்துல் ஜலீல், செயலாளர் ஹாஜி நசீர் கனி ஆகியோரும் மரபுடைமை நிலையத்தின் வசதிகள் மற்றும் செயல் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தனர்.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றைப் எடுத்துரைக்கும் காட்சி அரங்கு, பிரதான மண்டபம், வெளிமண்டபம், வரவேற்புப் பகுதி, பார்வையாளர்களுக்கான உணவகம் ஆகியவை மரபுடைமை நிலையத்தில் இயங்கும் என்று முயிஸ் தலைவரும் செயற்குழுவினரும் தெரிவித்தனர்.

காட்சிக்கூடத்தில இந்திய முஸ்லிம் சமூகத்தினரின் வரலாற்றை எடுத்துரைக்கும் நினைவுச் சின்னங்களும், ஆவணங்கள் உள்ளிட்ட சாதனங்களும் திரட்டி வைக்கப்படும். சிங்கப்பூர் வரலாற்றில் இந்திய முஸ்லிம்களின் பங்கு, அவர்களின் வர்த்தக, தொழில்துறை வளர்ச்சி, சிந்தனைகள், நம்பிக்கை, வழிபாட்டு முறைகள், தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் காட்சியகத்தில் இடம் பெறும் என்று செய்தியாளர் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

மரபுடைமை நிலைய உணவகத்தில் இந்திய முஸ்லிம் உணவு வகைகள் காட்சிக்கு வைக்கப்படும். பார்வையாளர்கள் அவற்றைச் சுவைத்து மகிழ்வதற்கு வசதியாக விற்பனை செய்யப்படுவதுடன், நமது உணவு வகைகளில் பயன்படுத்தப்படும் மசாலா, தாளிப்பு வகைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்படும்.

நாகூர் தர்கா 1974ல் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. தர்காவை மறுசீரமைக்கும் திட்டம் 1994ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்ட்டது. ஹாஜி ஷரஃப்தீன் தலைமையில் அமைந்த 18 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழு அந்த திட்டத்தை முன் வைத்தது.

தேசிய நினைவுச் சின்னமான நாகூர் தர்காவைப் புதுப்பிக்கும் சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் திட்டம் 25.11.1998ல் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. சமூக வளர்ச்சி மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சராக அப்போது பதவி வகித்த நாடாளுமன்ற நாயகர் அப்துல்லா தர்மூஜி அதனை அறிவித்தார்.

## வரலாறு

நாகூர் தர்காவின் வரலாறு நாம் அறிந்தது தான். சிங்கப்பூரில் குடியேறிய முஸ்லிம்கள் நாகூர் நாயகரின் நினைவாக தர்காவைக் கட்டினார்கள்.

1827 அக்டோபர் முதல் தேதி வழங்கப்பட்ட குத்தகையின் கீழ் தர்கா உருவாக்கப்பட்டது. அன்றைய தமிழ் முஸ்லிம் பிரமுகர் காதர் பிள்ளை, பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பெனியிடமிருந்து குத்தகையைப் பெற்றார். அதற்குரிய ஆவணங்கள் உள்ளன. அதன்படி தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் வழங்கப்பட்ட இடத்தில் 1828ஆம் ஆண்டுக்கும் 1830க்கும் இடையில் நாகூர் தர்கா கட்டி முடிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் நாகூரில் அமைந்துள்ள தர்காவின் பாணியில், அதே தோற்றப் பொலிவுடன் இந்த தர்கா உருவாக்கப்பட்டது. அந்நாளில் தொழுகை இடமாகவும் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்கள் ஒன்று கூடும் இடமாகவும் தர்கா விளங்கி வந்தது.

சிங்கப்பூர் நாகூர் தர்கா 1974ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் தேதி தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. தேசிய வரலாற்றுச் சின்னங்களை நினைவுகூரும் முயற்சியாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள் வரிசையில் நாகூர் தர்கா இடம் பெற்றது. 7.6.1984ல் ஒரு வெள்ளி மதிப்புடைய தர்காவின் முகப்புத் தோற்றத்தைக் கொண்ட அஞ்சல் தலை விற்பனைக்கு வந்தது.

தர்காவின் நிர்வாகப் பொறுப்புகளை 2000ம் ஆண்டு நீதி மன்ற ஆணையின்படி முயிஸ் ஏற்றுக்கொண்டது. இந்திய முஸ்லிம்களின் மரபுடைமை வளாகமாக-நிலையமாக(Indian Muslim Heritage Centre) தர்கா மேம்படுத்தப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

இந்திய முஸ்லிம்களின் வரலாற்றையும், கலாசாரத்தையும் சித்திரிக்கும் காட்சியகம், ஆய்வு மையம், நூலகம், நிகழ்ச்சி அரங்கு முதலானவை மரபுடைமை நிலையத்தில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாகூர் தர்காவை மரபுடைமை வளாகமாக மேம்படுத்தும் திட்ட விவரங்களை பென்கூலன் பள்ளிவாசலில் 20.5.2005ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் முயிஸ் தலைவர் ஹாஜி முஹம்மது அலமி மூசா முதல்முறையாக வெளியிட்டார். அந்தப் பணிக்கு நிதி திரட்டுவதற்காக தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீல் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. ஹாஜி ஷரஃப்புதீன், ஹாஜி நசீர் கனி, ஹாஜி மருது, ஹாஜி ஷேக் அலாவுதீன் ஆகியோர் இடம் பெற்றுள்ள குழு முனைப்புடன் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டதை முயிஸ் தலைவர் பாராட்டினார்.

இந்திய முஸ்லிம்கள் பாரம்பரியச் சிறப்புடையவர்கள். உழைப்பும் புரிந்துணர்வும் மிக்கவர்கள். அவர்களின் பலதுறைத் திறன் சமூகத்திற்கு சீரும் சிறப்பும் சேர்க்கக் கூடியது. அவர்களின் உழைப்புத் திறனுக்கு ஒரு சின்னம் இருப்பது அவசியம். அதற்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அப்போது குறிப்பிட்டார்.

## நிதி திரட்டும் விருந்து

தர்கா சீரமைப்புப் பணிக்கு நிதி திரட்ட 3.12.2006 அன்று இரவு சாங்கி எக்ஸ்போ அரங்கில் நடைபெற்ற அறப்பணி விருந்து நிகழ்ச்சி ஓர் இனிய வரலாற்றுப் பதிவு. மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர்.நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில், சுற்றுப்புற, நீர்வள அமைச்சரும், இஸ்லாமிய விவகார அமைச்சருமான டாக்டர் யாகூப் இப்ராஹிம், மூத்த வெளியுறவுத் துணையமைச்சர் ஹாஜி ஜைனுல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூசா முதலானோர் பங்கேற்றனர்.

நாகூர் தர்கா மரபுடைமை வளாக மேம்பாட்டுப் பணிக்கு உதவிக்கரம் நீட்டி ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் குழுவின் தலைவர் ஹாஜி ஜலீல் அவர்களும், உறுப்பினர்களும் நாடியின் மூலம் நன்றி பாராட்டினர்.

சிங்கப்பூரில் இஸ்லாமிய மரபுடைமை மற்றும் நாகரிகத்தைப் பாதுகாக்கும் சமுதாய முயற்சியைப் பளிச்சிடுவதாகவும், பயன்மிகு காட்சியரங்கமாகவும் நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் திகழும். சிங்கப்பூரின் பல சமய நல்லிணக்கம், பல இனப் புரிந்துணர்வை வளர்க்கும் பயணம் மற்றும் ஆய்வுப் பணி அரங்கமாகவும் இவ்வளாகம் விளங்கும். அன்று தொட்டு இன்று வரையிலான இந்திய முஸ்லிம் முன்னோடிகள், வணிகச் செம்மல்கள், அறக் கொடையாளர்கள், தலைவர்களின் சிறப்புமிகு வரலாற்றையும் கலாசாரத்தையும் எடுத்துரைக்கும் காட்சிக் கூடமாகவும் நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் விளங்கும்.

நாகூர் தர்கா சிங்கப்பூர் குடியரசின் சமயப் புரிந்துணர்வுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது. மரபுடைமை நிலைய வளாகம் திறக்கப்பட்ட பிறகு நமது முன்னோர்கள் நாட்டின் உருவாக்கத்திலும் கட்டமைப்பிலும் எத்தகைய பங்கை ஆற்றியுள்ளனர் என்பதை இளந்தலைமுறையினர் நன்கு அறிந்து கொள்வர் என்பது உறுதி என்று நிதி திரட்டும் குழுவின் செயலாளர் ஹாஜி நஸீர் கனி தெரிவித்தார்.

# பென்கூலன் பள்ளிவாசல் விடுமுறைக்கால வகுப்புகள்

மஸ்ஜித் பென்கூலனில் ஆண்டுதோறும் ஜூன் மற்றும் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் மாணவ மாணவியருக்கு விடுமுறைக்கால வகுப்புக்கள் 'கேம்ப் பிளஸ்ஸிங்ஸ்' என்ற பெயரில் நடைபெற்று வருகின்றன.

இம்முறை 38 மாணவர்களும் 18 மாணவிகளும் சிறப்புப் பயிற்சி பெற்றனர். 20 இளையர்கள் மூயிஸ் வழங்கும் aL.I.V.E. சிறப்புப் பயிற்சியும் பெற்றனர். இப்பயிற்சியின் நிறைவு விழா 26.12.2010ல் மஸ்ஜித் நிர்வாகக் குழுத் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம்.அப்துல் ஜலீல்PBM அவர்கள் தலைமையில் மஸ்ஜிதின் பன்னோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. மாணவர்கள், பெற்றோர்கள், மஸ்ஜிதின் இளைஞர் பிரிவு உறுப்பினர்கள், பயிற்சியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்ட அவ்விழாவில், மலேசிய முன்னாள் நீதிபதி, மூத்த சட்டவல்லுநர் ஹாஜி முகம்மது ரஷீத் கான் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "இக்காலத்தில் பெற்றோர் சந்திக்கும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவரது மகளார் செல்வி ருஸைனா "இக்கால மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்" என்ற தலைப்பில் அரபி மற்றும் தமிழ் மொழிகளில் உரையாற்றினார். மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சிகளுக்குப் பின் பரிசுகள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் சுவையான பகலுணவு வழங்கப் பட்டது.







# சி.தெ.மு.ந.ச. முகாம், நட்புமுறை பயண நிகழ்ச்சிகள்

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் அல் மத்ரஸா நூருல் இஸ்லாம், மாணவ, மாணவிகளுக்கான முகாம் (camp) நிகழ்ச்சியை நடத்தியது. செம்பவாங் மலாய் செட்டில்மென்ட் பள்ளிவாசல் வளாகத்தில் கடந்த ஜூலை மாதம் அந்த முகாம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மாணவ மாணவியருக்கு இஸ்லாமிய மார்க்க விஷயங்களின் செயல்முறை விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டது. பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

முகாமின் நிறைவு நாளன்று சங்கத்தின் உஸ்தாத் அல் ஹாபிஸ் ஆலிம் அசன் அலி ஃபைஜி அவர்களின் சிறப்பு சொற்பொழிவு இடம் பெற்றது. குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக கணினிகள் அப்போது வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் சங்கத்தின் உறுப்பினர்களும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

## ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பு நிகழ்ச்சி

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு பாத்தாம் தீவுக்கு நட்பு முறை பயணத்தை ஏற்பாடு செய்தது. அறுபதுக்கு மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பாத்தாம் தீவில் வசிக்கும் ஏழை மக்களுக்கு பெருநாள் அன்பளிப்பாக புத்தாடைகளும் இனிப்பு பதார்த்தங்களும் வழங்கப்பட்டன. புத்தகங்களும் வினியோகிக்கப்பட்டன.



தென்காசி சங்கத்தின் மூத்த உறுப்பினர் ஹாஜி கே.எஸ்.நயினார் முஹம்மது அவர்களின் பெரும் முயற்சியினால் அந்தத் தீவில் கட்டப்பட்டுள்ள மஸ்ஜித் ஷாகுல் ஹமீது எனும் பள்ளிவாசல் வளாகத்தில் இருபதுக்கு மேற்பட்ட ஆடுகள் குர்பானி செய்யப்பட்டு, தீவு மக்களுக்கு இறைச்சி வினியோகிக்கப்பட்டது. அவர்களுக்கு மதிய உணவும் தயாரித்து வழங்கப்பட்டது.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்துடன் அல் அமீன் பள்ளிவாசலும் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சி இனிய ஹஜ்ஜுப் பெருநாள் ஒன்றுகூடலாக, நட்புமுறை நல்லெண்ண உலாவாக அமைந்தது என்று சங்க நிர்வாகம் மனநிறைவு தெரிவித்தது. அல் அமீன் பள்ளிவாசலின் துணைத் தலைவர் ஹாஜி நூருத்தீன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Eidul Aldha prayer and distribution of meat at Al-Muttaqqin Mosque, 17 Nov 2010




Haj pilgrims send off at Changi Airport Terminal 2, 10 Nov 2010



Pre-Haj departure briefing at Singapore Expo, 2 Oct 2010




Launch of An-Nur Mosque's main upgrading project, 26 Nov 2010



Announcement of new Mufti - Sohibus Samahah Mohamed Fatris Bakaram of Singapore, 11 Nov 2010



Appreciation dinner in honour of Mufti Syed Isa Semait at Furama City Centre Hotel, 31 Dec 2010



Round table discussion with Prof Riaz Hassan at SIH, 1 Oct 2010



43rd Mosque Council meeting at Al-Amin Mosque, 27 Nov 2010

# நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்திற்கு நினைவுப் பொருட்கள் அன்பளிப்பு

நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் இந்திய முஸ்லிம் சமூகத்தின் பாரம்பரியத்தை, அவர்கள் இந்தியர்கள், முஸ்லிம்கள், சிங்கப்பூரர்கள் எனும் அடையாளத்தை எடுத்துரைக்கும் கண்காட்சியகமாக விளங்கும் என்று முறையாக அறிவிக்கப்பட்டது.



நவீன சிங்கப்பூர் 1819ல் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து இந்திய முஸ்லிம்கள் பல இன, பல சமூக சிங்கப்பூரின் அங்கமாகத் திகழ்ந்து வருகின்றனர். இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா மேம்பாட்டை நாடுவதுடன், இந்திய முஸ்லிம்களின் கடந்தகால, தற்கால, இன, சமய, நிலவியல் சங்கமிப்பை, செல்வாக்கை எடுத்துரைக்க விரும்புகிறது. அதற்கான ஆக்ககரமான ஒரு முயற்சியாக மரபுடைமை நிலையத்திற்குப் படங்களையும், நினைவுப் பொருட்களையும் திரட்டும் பணி ஜனவரி 8, 9 தேதிகளில் காலை மணி 10.30 மணி முதல் மாலை 5 வரை தெலுக் ஆயர் ஸ்திரீட் தர்காவில் நடைபெற்றது.



பழைய புகைப்படங்கள், பழைய நூல் பதிப்புகள், அச்சிடப்பட்ட இலக்கியங்கள், புத்தகங்கள், பட்டியல்கள், நாட்குறிப்புகள், கடிதங்கள் முதலானவற்றை வைத்திருப்போர் அவற்றை அன்பளிப்பாக வழங்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. செயற்குழுவின் அந்த வேண்டுகோளை ஏற்று சமூக ஆர்வலர்கள் அணிதிரண்டு குறிப்புகள், பழங்காலப் புகைப்படங்கள், தட்டுகள், ஆடை அணிகலன்கள், வெற்றிலைப் பாக்கு பெட்டிகள், தொட்டில் கம்பு முதலான வகைவகையான நினைவுப் பொருட்களை வழங்கினர். அரிய பல பழைய நூல்களையும், இதழ்களையும் பலர் கொண்டு வந்தனர்.



EMERGENCY CERTIFICATE

THIS IS TO CERTIFY THAT

அவற்றின் ஸ்கேனிங் படிவமும் புகைப்படமும் உடனுக்குடன் எடுக்கப்பட்டன. வருகை தந்தவர்கள் காத்திருந்த நேரத்தில் தொண்டூழியர்களுடன் மனம்விட்டு







உரையாடி தங்கள் நினைவுகளையும், தகவல்களையும் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் தேனீர் உபசரிப்பு வழங்கப்பட்டது. சுமார் 150 நன்கொடையாளர்கள் 400 பொருட்களை வழங்கினர். இதே தர்காவில் பிறந்து வளர்ந்த ஷேக் காதிரும், அவருடைய சகோதரி பாத்திமா பீவியும் இந்த நிகழ்ச்சிக்குக் குடும்ப உறுப்பினர்களுடன் வந்தனர். இவர்களின் தந்தையார் ஷேக் மைதீன் 1950களில் தர்காவின் பராமரிப்பாளராக இருந்தார். ஷேக் காதிர் தாம் எழுதிய சில புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

தக்கலை முஸ்லிம் அசோசியேஷன் தலைவர் கமால்தீன் தமது தந்தையை நினைவு கூரும் பதக்கத்தையும் புகைப்படங்களையும் தந்தார். சிங்கப்பூர் தபால்காரராக பணியாற்றிய தந்தையாருக்கு அன்றைய அதிபர் யூசுப் பின் இஷாக் வழங்கிய நற்சேவைப் பதக்கம் இது என்று நாடியிடம் தெரிவித்தார் ஜனாப் கமால். இன்னும் பல முக்கிய ஆவணங்களையும் மரபுடைமை நிலையத்திற்கு வழங்க விரும்புவதாக அவர் கூறினார்.

ஆசிரியர் மு.அ.மசூது 1950களில் எடுக்கப்பட்ட 15 புகைப்படங்களை ஒப்படைத்தார். அன்றைய முஸ்லிம்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்கள் அவை.

தங்கள் பெற்றோர்களுக்குக் கிடைத்த திருமணப் பரிசுப் பொருட்கள், அவர்கள் பயன்படுத்திய சுவர்க் கடிகாரம், மூக்குக் கண்ணாடி முதலானவற்றை இல்லத்தரசிகள் பலர் நன்கொடையாக வழங்கினர்.

முன்னாள் எஸ்.ஏ.மஜீது கம்பெனியில் திரட்டிவைக்கப்பட்டிருந்த முஸ்லிம் பிரமுகர்களின் புகைப்படங்கள், அந்த நிறுவனத்தின் பெயர் பதித்த பை ஆகியவற்றை எஸ்.ஏ.மஜீது அவர்களின் புதல்வி ஹவ்வாம்மா ஒப்படைத்தார்.

மரபுடைமை நிலையத்தில் இந்திய முஸ்லிம் சமூகத்தின் பன்முனைப் போக்கையும் வண்ணத்தையும் சித்தரிக்கும் புகைப்படக் காட்சிச் சுவர் அமைந்திருக்கும். அதில் இடம்பெறுவதற்கு வசதியாக உதவி நல்கியவர்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

சீன சமுகத்தினரும், ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளும் நிகழ்ச்சியைப் பார்வையிட்டு பரவசமடைந்தனர். நாகூர் தர்காவின் வரலாற்றையும், சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் கலாசார சிறப்பையும் அறிந்து கொள்ள இந்த நிகழ்ச்சி அரிய வாய்ப்பளித்ததாக ஐரோப்பிய தம்பதியர் மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்திய முஸ்லிம்களின் திருமணச்சடங்கில் பெண் வீட்டுச் சீதனமாக வெற்றிலைப் பெட்டி, விசிறி, ஊதுபத்தி தாங்கி, விளையாட்டுப் பொருட்கள் போன்றவை வழங்கப்பட்டு வந்துள்ளது வியப்பூட்டுவதாகக் கூறினார், பார்வையாளர் ஜேசன் லீ.

இரண்டு நாள் நிகழ்ச்சியில் எதிர்பார்த்த அளவைவிட அதிகமான பற்பல அரிய நினைவுப் பொருட்களை நமது சமூக ஆர்வலர்கள் வழங்கியுள்ளனர். அனைவருக்கும் நன்றி பாராட்டுகிறோம். இவையனைத்தும் மரபுடைமை நிலைய காட்சியகத்தில் உரிய பிரிவுகளில் காட்சிக்கு வைக்கப்படும். செயற்குழு அதன் தொடர்பில் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தும் என்று நிதிதிரட்டும் குழுவின் செயலாளர் நசீர் கனி நாடியிடம் தெரிவித்தார்.

மரபுடைமை நிலையத்தில் இடம் பெறுவதற்குரிய இந்திய முஸ்லிம் பாரம்பரியம் தொடர்பான வரலாற்றுக் குறிப்புகள், படங்கள் மற்றும் நினைவுப் பொருட்களை வைத்திருப்போர் தாமதிக்காமல் அவற்றை வழங்கி உதவலாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்திய முஸ்லிம் சங்கங்கள் மற்றும் அமைப்புகளைப் பற்றிய தகவல்களும் மரபுடைமை நிலையத்தில் இடம்பெறும். அதற்கு வசதியாக அவற்றின் பெயர்கள், அடையாளச் சின்னங்கள், தோற்றம், வளர்ச்சி தொடர்பான தகவல்களையும், புகைப்படங்களையும், கோப்புளையும் அனுப்பி உதவும்படி செயலாளர் நசீர் கனி கேட்டுக் கொண்டார். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: 96524721, 94682615.

# ஹாஜி மு.அ.மசூது அவர்களுக்கு முயிஸ் விருது

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுச்சேவை புரிந்துவரும் மு.அ.மசூது அவர்களுக்கு அனுகிரா ஜாஸா பக்தி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

முந்நூறுக்கு மேற்பட்ட முஸ்லிம் சமூகத் தலைவர்கள் கலந்து கொண்ட விருதளிப்பு விழாவில் மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர்.நாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த விருதை வழங்கினார். சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களுக்கு அருஞ்சேவை ஆற்றியமைக்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டமைக்காகவும், மதிப்புமிக்க பல்வேறு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தமைக்காகவும் மசூது அவர்களுக்கு அனுகிரா ஜாஸா பக்தி விருது வழங்கப்பட்டுள்ளது.





தமிழ் முஸ்லிம் காதி நியமனம் பெறவும், இஸ்லாமிய சமய மன்றத்தின் செய்தி இதழ் தமிழில் வெளிவரவும், தமிழ் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவ சபை அமையவும் சகோதரர் மசூது மிக முக்கிய பங்காற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் முஸ்லிம் பேரவை, தமிழ் ஆசிரியர் சங்கம், தமிழர் பேரவை ஆகிய முக்கிய அமைப்புகளில் துணைத் தலைவராகச் செயல்பட்டு வரும் மு.அ.மசூது, வசதி வாய்ப்பற்றோர் மேம்பாட்டிலும், மாணவர்களின் கல்வி நலத்திலும் அதிக சிரத்தைகாட்டி அவர்களுக்கு உதவி வருகிறார்.

அனுகிரா ஜாஸா பக்தி விருது பெற்றுள்ள அல்ஹாஜ் மசூது அவர்களின் பொதுப்பணி சிறந்து விளங்கிட நாடி ஆசிரியர் மனம் நிறைந்த நல்லன்பையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

# சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாய அடையாள அம்சங்கள்

முயிஸ் உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் ரிஸாலா-பத்து அம்சத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஒட்டு மொத்த சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமய, சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்தி, அவர்களின் அடையாளத்தை நிலைபெறச் செய்வது திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

1. இஸ்லாமியக் கோட்பாடுகளை வலுவாகப் பின்பற்றும் வேளையில் சிங்கப்பூர் முஸ்லிம்கள் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் திறனையும் பெற வேண்டும்.
2. ஆன்மீக, அறநெறிக் கோட்பாடுகளை வலுப்படுத்திக் கொண்டு புதிய சவால்களைச் சமாளிக்கும் திறனைப் பெற வேண்டும்.
3. நவீன சூழ்நிலைகள், காலமாற்றப் போக்குகள், பழக்க வழக்கங்களுக்கு இடையிலும் இஸ்லாமிய நெறிமுறைகளை மிக உறுதியாகப் பேண வேண்டும்.
4. தற்காலப் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்வதுடன் இஸ்லாமிய நாகரிகத்தையும் சரித்திரத்தையும் மதித்துப் போற்ற வேண்டும்.
5. மற்ற நாகரிகங்களை மதிப்பதுடன் மற்ற சமூகங்களின் நற்பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும்.
6. நல்ல முஸ்லிம்கள் நாட்டின் நல்ல குடிமக்களாகவும் திகழ வேண்டும்.
7. பல இன-சமய சமுதாயம், சமயச் சார்பற்ற நாடு எனும் கண்ணோட்டத்திற்கு ஏற்ப பொறுப்புணர்வுடன் முஸ்லிம்கள் பங்காற்ற வேண்டும்.
8. அனைவரின் நன்மதிப்புக்கும் உரியவர்களாக நாம் திகழ்ந்து அனைத்துலகக் கொள்கைகளை மேம்படுத்த வேண்டும்.
9. இஸ்லாத்திற்கு முரண் இல்லாத வகையில் மற்றவர் நற்பண்புகளை மதித்து பன்முனைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.
10. மற்ற சமூகத்தினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும்.

# மஸ்ஜித் ஜாமியா சூலியா மாணவர் முகாம்



*இஸ்லாம் மார்க்க அறிவைப் பெறுங்கள்!*
*திருக்குர்ஆனை மனனம் செய்யுங்கள்!*
*அறநெறிகளைக் கற்றறிந்து கொள்ளுங்கள்!*

இந்த இலக்குகளுடன் மாணவ மணிகளுக்கு முகாம் நடத்தி வருகிறது மஸ்ஜித் ஜாமியா சூலியா.

மாணவர்களுக்கான அதன் 11வது தஹ்ஃபிஸ் முகாமை நவம்பர்-டிசம்பர் பள்ளி விடுமுறை நாட்களில் சிறப்பாக நடத்தியது. இஸ்லாமிய அறநெறிகளையும் கோட்பாடுகளையும் வாழ்க்கை முறையையும் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து இளம் உள்ளங்களில் பதிய வைப்பது முகாமின் இலக்கு. விடுமுறைக் காலத்தை மாணவ மணிகள் பயனுள்ள முறையில் செலவிடுவது அவசியம் என்பதை அறிவோம். ஆண்டு தோறும் அதற்குக் களம் அமைத்துத் தருகிறது ஜாமியா சூலியா பள்ளிவாசல் நிர்வாகம்.

நமது பிள்ளைகளே இஸ்லாமிய உலக அரங்கின் எதிர்காலத் தூண்கள். அதனால் அவர்கள் இஸ்லாமியக் கொள்கை, சட்டம், நீதி ஆகியவற்றைக் கற்கவும், திருக்குர்ஆனை ஓதி, மனனம் செய்யவும் வாய்ப்பு வசதிகளை வழங்குவது நமது தார்மீகக் கடமை. அந்த வாய்ப்பை இந்த முகாம் வழங்கியது என்று பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவர் ஷேக் ஃபஹ்ருதீன் தெரிவித்தார்.

சவுத் பிரிட்ஜ் சாலை மஸ்ஜித் ஜாமியா வளாகத்தில் 23 நவம்பர் முதல் டிசம்பர் 23 வரை முறையான நேர அட்டவணையுடன் நடைபெற்ற முகாமில் மாணவ, மாணவிகள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். திருக்குர்ஆனை அர்த்தம் அறிந்து ஓதும் பயிற்சியிலும், மனப்பாடம் செய்வதிலும் அவர்கள் அதிக ஆர்வம் செலுத்தினர்.

இஸ்லாமியக் கல்வியும் பல கட்டங்களாக அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. மார்க்கக் கடமைகளை அறிந்து கடைப்பிடிக்கும் வாய்ப்பை இந்த முகாம் வழங்கியதாக மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். முகாமில் பிள்ளைகள் கலந்து கொள்வதற்கு பெற்றோர்கள் அளித்த ஆதரவுக்கு பள்ளிவாசல் நிர்வாகம் நன்றி பாராட்டியது.

---

# புகைப்பதை நிறுத்துங்கள்!

சிங்கப்பூர் இளைஞர்களிடம் புகைப் பழக்கம் அதிகரித்துள்ளது. 16 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 16.3 விழுக்காட்டினர் தினமும் புகைப்பிடிக்கின்றர். 2004ஆம் ஆண்டில் இருந்ததைவிட இது 4 விழுக்காடு அதிகம்.

தேசிய சுகாதார ஆய்வு முடிவு இதனைத் தெரிவித்தது. மலாய்-முஸ்லிம் இளையர்களும் இவர்களில் அடங்குவர் என்பதை சமூகம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அன்றாடம் புகைக்கும் பெரியவர்கள், மூத்தோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 6 ஆண்டுகளுக்கு முன் 2004ல் 12.6 விழுக்காடாக இருந்த எண்ணிக்கை 2010ல் 14.3 விழுக்காட்டுக்கு உயர்ந்தது.

இந்த விகித அடிப்படையில் பார்த்தால் பெரியவர்களைக் காட்டிலும் புகைப்பிடிக்கும் இளையர்களின் எண்ணிக்கையே அதிகம். நாட்டுக்கும் சமூகத்துக்கும் இது தீமை பயக்கக்கூடியது என்பதை உணர்ந்து செயல்படுவது அவசியம், புகைப் பழக்கத்திலிருந்து இளையர்களை விடுவிக்க முஸ்லிம் அமைப்புகள் பாடுபட வேண்டும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் ஏழு ஆண்டுகளுக்கு முன் மீலாது விழாவில் வலியுறுத்தினார்.

“உங்கள் கைகளால் நீங்களே அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள்” என்று திருக்குர்ஆன் விடுத்துள்ள எச்சரிக்கையை இதன் தொடர்பில் எண்ணிப் பார்ப்பது நமது சமூகக் கடமை. ஒவ்வொரு சிகரெட்டும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட வகை இரசாயனங்களைக் கொண்டது. அவற்றில் நானூறு இரசாயனங்கள் நச்சுத்தன்மை உடையவை. அந்த நானூறில் நாற்பது, புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியவை. புகைப்பதால் பொருளாதார சிரமங்களும் ஏற்படும். ஒருவர் தினமும் 20 சிகரெட்டுகளைப் புகைத்தால் ஆண்டுக்கு 2000 வெள்ளியைச் செலவிடுவார்.

புகைப்பதால் ஏற்படும் நோய்க்கு அதிக மருத்துவச் செலவும் ஏற்படும். “அளவு கடந்து வீண் செலவு செய்ய வேண்டாம். மிதமிஞ்சி செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர்” என்பது திருக்குர்ஆனின் எச்சரிக்கை.

புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம். சமூக அமைப்புகள் இதற்கென இயக்கங்களை நடத்தலாம்.

# நற்பணிச் செல்வர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், எம்.கே.ஏ.ஜப்பார் மறைவு

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் நடத்திய இரங்கல் கூட்டத்தில் பிரமுகர்கள் உரை


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னணி தொழிற் சங்கத் தலைவர், சமூக நற்பணிச் செல்வர், தாய்மொழிக் காவலர், கடமை வீரர், பன்முனைப் பணிகளால் சிங்கப்பூருக்குச் சிறப்பு சேர்த்த பெருமகன் அல்ஹாஜ் எம்.கே.ஏ.ஜப்பார்அவர்கள் காலமாகிவிட்டார். அவருடைய பிரிவு சமுதாயத்திற்குப் பேரிழப்பு.

உடல்நலக் குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் 27.11.2010 அன்று காலை தமது 77 வயதில் இறப்பெய்தினார். அப்துல் ஜப்பார் நாகூரில் 1933ஆம் ஆண்டில் பிறந்து 1950ல் சிங்கப்பூருக்கு வந்தார். துறைமுக ஊழியராகச் சேர்ந்தார். பொதுச்சேவை ஆர்வலரான அவர், மக்கள் செயல்கட்சி உறுப்பினராகவும் தொழிற்சங்க ஈடுபாடுமிக்கவராகவும் இருந்தார்.

ஈராயிரம் உறுப்பினர்களைக் கொண்ட கெப்பல் ஷிப்யார்ட்-கப்பல் பட்டறை தொழிலாளர் சங்கத்தின் தலைவராகத் திகழ்ந்த ஜப்பார் அவர்களை நாடாளுமன்ற உறுப்பினராக்க மக்கள் செயல் கட்சி விரும்பியது. மதியுரை அமைச்சரான அன்றைய பிரதமர் திரு.லீ குவான் இயூ கேட்டுக்கொண்டதால் 1980 பொதுத்தேர்தலில் ராடின் மாஸ் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தேர்தல் வெற்றிக்குப் பிறகு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய திரு.லீ குவான் இயூ, சமுதாயத்திற்கு ஆதாரமான ஒரு தூணாகத் திகழ்பவர் ஜப்பார் எனப் பாராட்டினார். ஈராயிரம் கெப்பல் ஷிப்யார்ட் ஊழியர்களின் முழு நம்பிக்கையைப் பெற்றுள்ள தொழிற்சங்கத் தலைவர் இவர். தமிழ்க் கல்வி மட்டுமே கற்ற இவர் ஒரு சமுதாயத் தூண் என்பதை இளையர்களுக்கு புலப்படுத்த வேண்டும் என்றும் அப்போது, 1980ல் லீ குறிப்பிட்டார். ஐந்தாண்டு காலம் ராடின் மாஸ் தொகுதியின் உறுப்பினராக இருந்த அவர் ஆற்றிய பணிகள் மறக்கமுடியாதவை. நாடாளுமன்றத்தில் தமிழில் பேசி ஆணித்தரமாக கருத்துகளையும், கோரிக்கைகளையும் எடுத்துரைத்தவர் அவர். ஊழியர்களை நன்கு கவனித்துக் கொள்ளும் சிறந்த தொழிற்சங்கவாதியாககவும், தொகுதி மக்களை நன்கு கவனித்துக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஜப்பார் திகழ்ந்தார் என்று அவருடன் சக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.எஸ்.சந்திரதாஸ் இரங்கல் செய்தியில் தெரிவித்தார். ஜப்பார் அவர்களை இழந்து தவிக்கும் மனைவிக்கும் மூன்று மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் அவர் தெரிவித்துக் கொண்டார்.

இந்திய முஸ்லிம் சமூகத்தின் தலைசிறந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தவர் எம்.கே.ஏ.ஜப்பார் என கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டார். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சிங்கை இந்திய சமுதாயத்திற்கும் பல வகையில் உதவிபுரிந்து கலை, கலாசாரம், பண்பாட்டு வளர்ச்சிச்கு அரும்பாடுபட்ட மாபெரும் தலைவரை இழந்து



வருந்துகிறோம் என்று சிங்கை மாதவி இலக்கிய மன்றம் அனுதாபம் தெரிவித்தது.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அமைப்புகளில் அவர் ஆற்றிய பணிகளை சமூகம் நன்கறியும். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவராக 1990 முதல் 2003 வரை இருந்தார். இந்திய முஸ்லிம் சங்கங்களை ஒருங்கிணைக்கும் அரியதொரு முயற்சியாக 1992ல் இந்திய முஸ்லிம் பேரவையை அமைத்தார். அதன் தலைவராக ஈராண்டுகள் பணியாற்றிய ஜப்பார் தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் மற்ற சங்கங்களின் தலைவர்கள் ஏற்பதற்கு வழிவகை செய்தார். பேரவையின் ஆலோசகராக அவர் இருந்து வந்தார். தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்-ன்.டி.யூ.சி-ஹலால் பிரிவு, கருத்தறியும் பிரிவு ஆகியவற்றிலும் இடம் பெற்றிருந்தார்.

இனம், மொழி, மதம் என்ற வேறுபாடு இல்லாமல் பல இன, சமூக மக்களுடனும் நாம் இணைந்து சேவையாற்ற வேண்டும் என்று ஆலோசனை கூறிவந்தார் அல்ஹாஜ் எம்.கே.ஏ.ஜப்பார்.

ஜப்பார் அவர்களின் நல்லுடல் 27.11.2010 மாலை உட்லண்ட்ஸ் அன் நூர் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட ஜனாஸா தொழுகைக்குப் பிறகு சுவா சூ காங் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது.

### இரங்கல் கூட்டம்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் எம்.கே.ஏ.ஜப்பார் மறைவுக்கு 12.12.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை இரங்கல் கூட்டம் நடத்தியது. மஸ்ஜித் பென்கூலன் இரண்டாவது தள பன்னோக்கு மண்டபத்தில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் சமூகத் தலைவர்களும் சமுதாய ஆர்வலர்களும் இரங்கல் உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியை நெறிப்படுத்திய ஜஹாங்கீர் தமது தொடக்கவுரையில் ஜப்பார் அவர்கள் உன்னதமான மனிதர், சிறந்த தலைவர் எனக் குறிப்பிட்டார். தொழிற்சங்கத் தலைவர் தேவன் நாயர், கந்தசாமி, தமிழவேள் கோ.சாரங்கபாணி முதலான மூத்த சாதனையாளர்களுடன் அவர் கொண்டிருந்த பிணைப்பை சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் ஃபரியுல்லாஹ் அல்ஹாஜ் எம்.கே.ஏ.ஜப்பாரின் சாதனைகளை தமது இரங்கல் உரையில் எடுத்துரைத்தார். “அவர் மாற்றத்தை அறிமுகப்படுத்தியவர். அவற்றைச் செயல்படுத்தியவர். செயல்முறைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தவர். பிறருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். பாசிர்பாஞ்சாங் முஸ்லிம் சங்கத்தை 1990ல் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கமாக மாற்றி அனைவரையும் ஏற்றுக் கொள்ளச் செய்தவர். இந்திய முஸ்லிம் பேரவையை உருவாக்கியவர். நல்ல பல மாற்றங்களைச் செய்து முன்னேற்றத்தை ஏற்படுத்தியவர். இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களிடம் சங்கத் தலைமைப் பொறுப்புகளை ஒப்படைத்தவர். அவர்களில் நானும் ஒருவன். யார் உதவி கேட்டாலும் உதவும் மனப்பாங்குடையவர்” என விளக்கி தமது சங்கத்தின் சார்பில் புகழஞ்சலி செலுத்தினார், ஃபரியுல்லாஹ்.

தமிழ்பேசும் உரிமையை நன்கு பயன்படுத்திய பெருமான். மொழி, இன, சமூக ஐக்கியத்தை ஒருங்கிணைக்கும் நெறியாளராக இருந்தவர். தமிழவேளுக்குப் பிறகு பெருந்தொண்டாற்றிய பெருந்தகை ஜப்பார் தான் என்று பேராசிரியர் திண்ணப்பன் குறிப்பிட்டார். பல தமிழ் அறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர் அவர் தான்! அவரைப் பற்றி ஒரு நூல் விரைவில் வெளியிடப்பட வேண்டும் என்றும் திண்ணப்பன் பரிந்துரைத்தார்.

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் முன்னைய தலைவர் திரு.அமலதாசன், சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து இடையறாது செயல்பட்டவர் ஜப்பார் அவர்கள் என தமது இரங்கலுரையில் குறிப்பிட்டு விளக்கினார். அவரை மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ நாடாளுமன்ற உறுப்பினராக்கி பாராட்டுரை வழங்கியதையும், தமிழவேள் சாரங்கபாணி பெயரில் அறக்கட்டளை அமைக்க ஒரு மாத ஊதியத்தை வழங்க அவர் முன்வந்ததையும் அமலதாசன் நினைவுகூர்ந்தார். எழுத்தாளர் கழகத்திற்கும், சிங்கப்பூர் தமிழர் இயக்கத்திற்கும் ஜப்பார் நல்கிய ஆதரவை நெகிழ்ச்சியுடன் அமலதாசன் குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் ஹாஜி நசீர் கனி, 1980களில் முஸ்லிம் அமைப்புகளை ஒருங்கிணைப்பதில் ஜப்பார் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை நினைவுகூர்ந்தார். நமது சங்கங்கள் ஒன்றிணைந்த போக்கைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் 15 அமைப்புகளைத் திரட்டி ஒரு பேரவையை உருவாக்கி சமுதாயத்தை சீரிய முறையில் வழிநடத்த வகை செய்தவர் அல்ஹாஜ் ஜப்பார் என புகழஞ்சலி செலுத்தினார் நசீர் கனி.

மாதவி இலக்கிய மன்றத்தின் தலைவர் திரு.என்.ஆர்.கோவிந்தன், 1977முதல் ஜப்பார் அவர்களுடன் தாம் கொண்டிருந்த நட்புறவை விவரித்தார். தமிழவேள் கோ.சாரங்கபாணி விட்டுச் சென்ற தமிழர் திருநாளை தொடர்ந்து நடத்த வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கியதால் 1980 முதல் அந்தப் பணியை மேற்கொண்டு வருவதாகச் சொன்னார் திரு.கோவிந்தன். எளிமையாக வாழ்ந்தவர் ஜப்பார். தூய்மை, நேர்மை மிக்கவர். பல ஆண்டுகளுக்கு முன் அவர் நோயுற்றபோது மருத்துவ வசதிக்குரிய ஏற்பாடுகளைச் செய்தவர் திரு.கோவிந்தன்.




தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு.ஹரி கிருஷ்ணன், இன, சமய நல்லிணக்க, நற்பண்புகளை உருவாக்கும் ஒரு பாலமாகத் திகந்தவர் எம்.கே.ஏ.ஜப்பார் எனக் கூறினார்.

ஜாமியா சிங்கப்பூரின் துணைத் தலைவர் முகம்மது சலீம் அரிய பல தொண்டுகளை ஆற்றியவர் ஜப்பார் எனத் தொடங்கி, அவருடைய பன்முகப் பணிகளைப் பட்டியலிட்டார். அண்மையில் பதவி ஒய்வு பெற்ற ஜாமியா தலைவர் அபுபக்கர் மைதீன் அவர்களுடன் அவ்வப்போது அரிய ஆலோசனை நடத்தி நல்ல பல செயல் திட்டங்ளுக்கு வழிவகுத்தார். அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்களை ஒன்று திரட்டி தமிழ் இலக்கியப் பாலம் அமைத்தார் என்றார் ஜனாப் சலீம்.

ஹாஜி இப்ராஹிம் மரைக்கான், ஜப்பார் அவர்களுடனான தமது பணிகளையும் நினைவுகளையும் பகிர்ந்து கொண்டார்.

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் முன்னைய தலைவர், ASECS அமைப்பின் தலைவர் ஷேக் அலாவுதீன், 1980களில் ஜப்பார் அவர்கள் மேற்கொண்ட அரிய பணிகளை எடுத்துரைத்தார். சமுக ஒற்றுமைக்காகப் பாடுபட்ட அவர் பெயரில் அறக்கட்டளை நிறுவப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

எழுத்தாளரும் நூலாசிரியருமான ஹிமானா சையத், ஜப்பார் அவர்களைப் பற்றி ஒரு நூலும், அவர்கள் பெயரில் அறக் கட்டளையும் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனைகளை வரவேற்றுப் பேசினார். தமிழக இதழ்களில் அவருடைய சாதனைகள் குறித்த கட்டுரைகள் இடம் பெறுவதற்கு ஆவன செய்துள்ளதாக அவர் சொன்னார்.

## புனித மக்காவில்

அல்ஹாஜ் எம்.கே.ஏ.ஜப்பார் அவர்கள் காலமான அதே நாளில் புனித மக்கா நகரிலும் பாத்திஹா ஓதி ஹாஜிகள் துஆ இறைஞ்சினர். ஹஜ் பயணம் மேற்கொண்டிருந்த சிங்கை மு.இலியாஸ் அதற்கு ஏற்பாடு செய்தார். கஅபாவுக்கு அருகிலுள்ள ஓர் ஓட்டலில் நடைபெற்ற அந்தப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் எழுபதுக்கு மேற்பட்ட ஹாஜிகள் கலந்து கொண்டனர். JMH அரபிக் கல்லூரியின் முதல்வர் அல்ஹாஜ் கி.முஹம்மது இஸ்மாயில் பாஜில் பாகவி தலைமையில் பாத்திஹா ஓதப்பட்டது. எம்.கே.ஏ.ஜப்பார் அவர்களின் நற்பணிகளை ஹாஜி இலியாஸ் சுருக்கமாக அப்போது குறிப்பிட்டார்.

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்ப தினம்

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் அமைப்புகள் ஆண்டுதோறும் குடும்ப தினத்தைக் கொண்டாடி வருகின்றன. கடையநல்லூர் முஸ்லிம் லீக் 5.12.2010 அன்று ஈஸ்ட் கோஸ்ட் பூங்காவில் காலை 9 மணி முதல் குடும்ப தினத்தைக் கொணடாடியது. இளையரும் மூத்தோருமாக 800க்கு மேற்பட்டோர் மாலை 5 மணி வரை நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டனர்.

மூத்தோரைச் சிறப்பிப்பதை இலக்காகக் கொண்ட குடும்ப தினம் ஹிஜ்ரி புத்தாண்டை வரவேற்கும் விழாவாகவும் அமைந்தது.

ஜுரோங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய தொழிற்சங்க காங்கிரசின் துணைத் தலைமைச் செயலாளருமான திருவாட்டி ஹலீமா யாக்கூப் விழாவின் சிறப்பு விருந்தினர். வலுவான குடும்பப் பிணைப்பின் அவசியத்தை அவர் தமது உரையில் வலியுறுத்தினார். கடையநல்லூர் முஸ்லிம் லீகின் சாதனைகளை அவர் பாராட்டினார்.

“பழைய சங்கமாக, நீண்ட கால சமூக அமைப்பாக இருந்தாலும், மாறிவரும் காலச்சூழலுக்கு ஏற்ப பயன்மிக்க பணிகளை, திட்டங்களை கடையநல்லூர் முஸ்லிம் லீக் செயல்படுத்தி வருகிறது. இந்திய முஸ்லிம் சமூகத்தினர் ஆக்ககரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவசியமானவற்றை சங்கம் செய்து வருவது பாரட்டுக்குரியது. ஓர் எடுத்துக்காட்டாக, இல்லத் தரசிகளுக்கும் இளையருக்கும் கணினி வகுப்புகளை நடத்துவது குறிப்பிடத்தக்கது. காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யும் மனப்போக்கை, சிந்தனைத் திறனை இது பிரதிபலிக்கிறது” என்று அவர் குறிப்பிட்டார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் முன்னோடிகளுக்கு ஹலீமா யாக்கூப் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

வசதி குறைந்த பத்து குடும்பங்களுக்கு பரிசுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி சமூக முன்னேற்றத்திற்காக சங்கத்தின் திட்டங்களை எடுத்துரைத்தார். இன்றைய இளையர்களே நாளைய தலைவர்கள். எனவே, நாளடைவில் தலைமைத்துவப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்குரிய செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவற்றில் பங்கேற்பதற்கு





அதிகமான இளையர்களை ஈர்ப்பது தங்கள் இலக்கு என்று அவர் கூறினார்.

பரவசமூட்டும் பற்பல நிகழ்ச்சிகள் குடும்ப தினக் கொண்டாட்டத்திற்குக் குதூகலம் சேர்த்தன. இசை, மேடைக் கலை நிகழ்ச்சியுடன் உடற்பயிற்சிகளும் இடம் பெற்றன. ஆரோக்கிய வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக ஏரோபிக்ஸ் பயிற்சி நடைபெற்றது. பத்து நிமிட உடற்பயிற்சியில் சிறப்பு விருந்தினர், குடும்ப தின ஏற்பாட்டுக் குழுவினர், வருகையளித்தவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று மகிழ்ந்தனர்.

மகிழ்ச்சி சேர்த்த மற்றொரு நிகழ்ச்சி மணல் கோட்டை உருவாக்கும் போட்டி. பல குடும்ப உறுப்பினர்கள் கற்பனைச் செறிவுடன் மணல் கோட்டை கட்டினர். ஜுலைஹா, நசீரா, மீரா, ஸக்கியா அணி வெற்றி பெற்றது.

மலாய் பாரம்பரிய ஐந்து கல் விளையாட்டில் பலர் பங்கேற்றனர். குழந்தைப் பருவத்தை நினைவுகூரும் ஒரு விளையாட்டு இது. தேனீர் தயாரிப்பு மற்றொரு நிகழ்ச்சி. தே தாரிக் பானம் சிங்கப்பூர், மலேசியா, புருணை உணவகங்களில் பிரபலம் வாய்ந்தது. அதைத் தயாரிக்கும் காட்சி பலரைக் கவர்ந்தது.

பிள்ளைகளுக்கான வண்ணம் தீட்டும் நிகழ்ச்சியில் ஏராளமான இளம் சிறார்கள் கலந்து கொண்டனர். அதிர்ஷ்ட சீட்டுக் குலுக்கும் நடைபெற்றது.






Printed by Viva Lithographers Pte. Ltd.